விரைவு நீதிமன்றம் (நடுவர் நிலை),
கோவில்பட்டி

முன்னிலை: **திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், கோவில்பட்டி(மு.கூ.பொ).

2025 வது வருடம், ஜீன் மாதம், 11-ம் நாள் வியாழக்கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண். 72/2014
CNR. No. TNTT12-000024-2014

வ.எண்;		**புகார்தாரர் விபரங்கள்**
1.	புகார்தாரரின் பெயர்	S. செல்வராஜ்
2	புகார்தாரரின் தந்தை/ கணவர் பெயர்	செண்பகம்
3	புகார்தாரரின் வேலை	-
4	புகார்தாரரின் முகவரி	2792/6, மெயின்ரோடு, லட்சுமிபுரம், கோவில்பட்டி
5	புகார்தாரரின் வயது	55/2014
		எதிரியின் விபரங்கள்
6	எதிரியின் பெயர்	V. ஆனந்தன்
7	எதிரியின் தந்தை/ கணவர் பெயர்	வரதராஜீலு
8	எதிரியின் வேலை	-
9	எதிரியின் முகவரி	45 B-5, பாரதிநகர் 2 வது தெரு, கோவில்பட்டி
10	எதிரியின் வயது	45/2014
		தேதி
11	சம்பவம்	26.08.2014
12	புகார்	15.10.2014
13	எதிரியின் கைது	எதிரி கைது செய்யப்படவில்லை.
14	பிணை விபரம்	எதிரி பிணை பெறவில்லை.
15	வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி	18.11.2025

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:10:47 +0530

16	வழக்கு விசாரணை முடிக்கப்பட்ட தேதி	10.06.2026
17	உத்தரவு	எதிரி மீது மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரியை குவி.மு.ச 255(2)ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து ஆறு மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், நஷ்டஈடு தொகையாக ரூ.4,00,000/– காசோலை திருப்பப்பட்ட நாள் முதல் நஷ்ட ஈடு தொகை கொடுக்கும் வரை ஆண்டு வட்டி 9% கணக்கிட்டு எதிரி, புகார்தாரருக்கு கொடுக்கும்படியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.
18	தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம்	1.மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு தீர்ப்புரையின் நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. 2. எதிரிக்கு தீர்ப்புரையின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது.
19	காலதாமதத்திற்கான விளக்கம்	எதிரி மீது பிடியாணை நிலுவையில் இருந்ததினாலும், சாட்சிகளின் விசாரணையினாலும் கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு கடந்த 16.10.2014 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன் 10.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M. ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.வளன் வினோ சிங் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கானது புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டிற்கு எதிரிகள் மீது விசாரணை நடத்தக் கோரி குற்றவியல் விசாரணை நடைமுறைச்சட்டப்பிரிவு 200 ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்புகார் ஆகும்.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:10:54 +0530

புகார்மனுவின் சுருக்கம்:

2. புகார்தாரரும், எதிரியும் நன்கு பழக்கமானவர்கள் என்ற அடிப்படையில், எதிரி அவரது அவசர செலவுக்காக ரூ.4,00,000/−(நான்கு லட்சம்) கடனாக வேண்டுமென்றும், மேற்படி கடன் தொகையினை ஒன்றரை மாத காலத்திற்குள் திரும்ப தந்து விடுவதாக கூறி கடந்த 25.06.2014 அன்று ரூ.4,00,000/−ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அன்றைய தினமே மேற்படி கடன் தொகைக்கு ஈடாக HDFC வங்கி, கோவில்பட்டி கிளையின் காசோலை எண்.000001 கொண்ட காசோலையினை 16.08.2014 என தேதியிட்டு எதிரி, புகார்தாரருக்கு கொடுத்துள்ளார்.

3. அதன்பிறகு மேற்படி காசோலையினை கடந்த 16.08.2014 அன்று புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி கிளையில் காசோலையை பணமாக்கும் பொருட்டு தாக்கல் செய்தபோது, எதிரியின் காசோலை "Funds Insufficient" என்ற வங்கி குறிப்புடன் 26.08.2014 அன்று திருப்பப்பட்டுள்ளது.

4. அதன்பின் புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலமாக 10.09.2014 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளாமல், பின்பு 10 நாட்கள் கழித்து கடந்த 20.09.2014 அன்று பொய்யான சங்கதிகள் கூறி திருப்பி அனுப்பியுள்ளார். எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தும், எதிரி வழக்கு காசோலையை புகார்தாரருக்கு கொடுத்து மோசடி செய்து ஏமாற்றி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்தை செய்துள்ளார். எனவே, எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு இழப்பீடும் வழங்க வேண்டுமென்று புகார்தாரர் தரப்பில் 15.10.2014 அன்று குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி புகாரானது பரிசீலிக்கப்பட்டு போதிய முகாந்திரம் இருந்ததால் 16.10.2014 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். குவிமுச பிரிவு 251 ன் கீழ் எதிரியிடம் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவு 138 ன் கீழான குற்றச்சாட்டு குறித்து 18.11.2025 அன்று கேள்வி கேட்கப்பட்டபோது தான் செக்யூரிட்டிக்காக நிரப்பப்படாத காசோலையை கொடுத்ததாகவும், எதிரி இது பொய் வழக்கு என்றும் எதிரி மறுத்துள்ளார்.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:00 +0530

6. புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சி முடித்துக்கொள்ளப்பட்டது.

<u>**புகார் தாரர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்**</u>

7. பு.சா.1 செல்வராஜ் தனது முதல் விசாரணையில் புகார் மனுவை ஒத்து முதல்விசாரணையை ஆணையுறுதி பத்திரமாக தாக்கல் செய்துள்ளார். பு.சா.1–ன் மூலமாக 1. 16.08.2014 தேதியிட்ட HDFC வங்கி, கோவில்பட்டி கிளையின் ரூ.4,00,000/–ற்கான காசோலை எண்.000001 கொண்ட காசோலை அசல் (**பு.சா.ஆ.1**), 2. 16.08.2014 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி கிளையின் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்ததற்கான செக் டெப்பாசிட் செல்லான் அசல் (**பு.சா.ஆ.2**), 3.26.08.2014 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி கிளையின் காசோலை திருப்பட்டதற்கான குறிப்பாணை அசல் (**பு.சா.ஆ.3**), 4.10.09.2014 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் (**பு.சா.ஆ.4),** 5. 11.09.2014 தேதியிட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல் (**பு.சா.ஆ.5)** ஆகியவை சான்றாவணங்களாக குறியிடப்பட்டுள்ளது.

8. இத்துடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டது.

9. குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமானவற்றை 23.02.2026 அன்று கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி சாட்சியத்தை பொய் என்று மறுத்தும் தங்களது தரப்பில் சாட்சியம் உண்டு என்று கூறினார்கள்.

10. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்பதால் இத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

11. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக ஆராய்ந்து பரிசீலிக்கப்பட்டது.

12. குற்றமுறையீட்டாளர் தரப்பில் மாற்றுமுறையாவணங்கள் சட்டப் பிரிவு 138 ன் படியான எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டினை நிரூபிக்க குற்றமுறையீட்டாளர் தரப்பில் பு.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், புகார்தாரர் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:07 +0530

கீழான தேவைகளை கடைபிடித்துள்ளதாகவும், பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சாட்சியம் மற்றும் ஆவணங்கள் வாயிலாக குற்றமுறையீட்டாளர் தனது வழக்கினை நிரூபித்துள்ளதாகவும், எதிரி காசோலை மற்றும் அதில் உள்ள கையொப்பத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், எ.சா.ஆ.1 2010ம் ஆண்டு எழுதப்பட்டுள்ள நிலையில் 2014ம் ஆண்டு எதிரி கடன் வாங்கியுள்ளார் என்றும், இந்த வழக்கின் கடனுக்கும், எ.சா.ஆ.1க்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், எதிரி தரப்பு எதிர்வாதம் நிரூபிக்கப்படவில்லை என்றும், புகார்தாரர் தனது வழக்கினை சட்டப்படி நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனையும், புகார்தாரருக்கு உரிய இழப்பீடும் வழங்கி தீர்ப்பளிக்குமாறும் புகார்மனுவை ஒத்து வாதிடப்பட்டுள்ளது.

13. எதிரி தரப்பில் இது பொய் வழக்கு என்றும், எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எதிரி, புகார்தாரரிடமிருந்து புகாரில் குறிப்பிட்டுள்ளபடி எந்தவித கடனும் பெறவில்லை என்றும், எதிரி ரூ.2,00,000/- தான் வாங்கியதாகவும், அதற்கு எதிரி, புகார்தாரருக்கு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்ததாகவும், தான் நிரப்பப்படாத காசோலையை செக்யூரிட்டிக்காக புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், எதிரியின் இரண்டு காசோலைகள் புகார்தாரரிடம் உள்ளதாகவும், திலிப் குமார் சேட் என்பவரிடம் ரூ.2,00,000/- எதிரி கடன் பெற்றதிற்காக 3 நிரப்பப்படாத காசோலைகள் மற்றும் புரோநோட் புகார்தாரர் மூலம் மேற்படி திலிப் குமார் சேட்டிற்கு கொடுக்கப்பட்டதாகவும், அதில் ஒரு காசோலையை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், புகாரிலுள்ள குற்றச்சாட்டுக்களை மறுப்பதாகவும், பு.சா.2 சாட்சியத்தின்படி மேற்படி காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையில் புகார்தாரர் வழக்குப்படி துலங்காது என்றும், 26.08.2014 அன்று குறிப்பாணை கொடுக்கப்படவில்லை என்று பு.சா.2 சாட்சியமளித்துள்ளதாகவும், வழக்கிடை குறிப்பாணை போலியானது என்றும், மேற்படி காசோலை வசூலுக்கு தாக்கல் செய்தது புகார்தாரரின் வங்கி கணக்கில் துலங்காது என்றும், குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள தேதி தவறானது என்றும், குறிப்பாணையில் முத்திரை மற்றும் கையொப்பம் எதுவும் இல்லை என்றும், புகார்தாரர் வழக்குப்படி 'Friendly loan' என்பது சட்டப்பூர்வமான கடனாக மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் பார்க்க முடியாது என்றும், எதிரி புகார்தாரருக்கு சாதகமான அனுமானத்தை மறுத்தளித்துள்ளதால் புகார்தாரர் தான் வழக்கினை நிரூபிக்க வேண்டும் என்றும், புகார்தாரரின் வழக்கு முரண்பாடாக இருப்பதாகவும், எனவே எதிரி

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:13 +0530

விடுதலை செய்யப்படவேண்டும் என்றும் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் எதிரி தரப்பில் மாண்புமிகு ஜார்கண்ட் உயர்நீதிமன்றம் Md. Masudul Haque Ansari @ M.H.Ansari Vs The State of Jharkhand and two others [2026:JHHC:13634], மாண்புமிகு உச்சநீதிமன்றம் M.S.Narayana menon @ Mani Vs State of kerala and another [(2006) AIR(SCW)4652] ஆகிய தீர்ப்புரைகளையும், ரிசர்வ் வங்கி சுற்றறிக்கை RBI/2011-12-121, DPSS.Co.CHD.No.120/03.06.01 /2011-12 ஆகியவற்றையும் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், புகார்தாரர் தரப்பு வழக்கானது எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்களை தகு நிலை ஐயப்பட்டிற்கு அப்பாற்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்?

14. புகார்தாரர் பெயருக்கு வரையப்பட்ட 16.08.2014 தேதியிட்ட HDFC பேங்க், கோவில்பட்டி கிளையின் ரூ.4,00,000/-ற்கான காசோலை எண்.000001 கொண்ட காசோலை (பு.சா.ஆ.1) ஐ, புகார்தாரர், சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி கிளையில் செக் டெப்பாசிட் செல்லான் (பு.சா.ஆ.2) ன் மூலம் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பு.சா.ஆ.1 காசோலையானது "Funds Insufficient" என்ற குறிப்பாணையுடன் (பு.சா.ஆ.3) 26.08.2014 அன்று திருப்பப்பட்டுள்ளது. அதன்பின் புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிகளுக்கு 10.09.2014 தேதியிட்ட சட்ட அறிவிப்பை (பு.சா.ஆ.4)ஐ அனுப்பியுள்ளார். மேற்படி பு.சா.ஆ.4 சட்ட அறிவிப்பு 11.09.2014 ம் தேதியிட்ட அஞ்சலக உறை (பு.சா.ஆ.5) மூலம் திருப்பப்பட்டுள்ளது.

15. புகார்தாரர் இந்த வழக்கை இந்த நீதிமன்றத்தில் 15.10.2014 அன்று தாக்கல் செய்துள்ளார். எனவே புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டப்பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழான சட்டப்பூர்வமான நிபந்தனைகளை கடைபிடித்துள்ளார்.

16. சட்டப்பூர்வமான கடனுக்காகத்தான் காசோலை வரையப்பட்டது என்று மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவுகள் 118 (a) மற்றும் 139 ன் கீழ் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்படுகிறது. மேற்படி அனுமானத்தை எதிரியால் மறுதளிக்க முடியும். பு.சா.ஆ.1 காசோலை எதிரியினுடையது இல்லை என்று எதிரி தரப்பில் மறுக்கவில்லை. இந்த வழக்கு பு.சா.ஆ.1 காசோலையிலுள்ள கையொப்பத்தை எதிரி தரப்பில் குறிப்பிட்டு மறுக்கவில்லை.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:19 +0530

17. மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் M/s. laxmi Dyechem (Vs) State of Gujarat & Ors. (2013 CRI.L.J. 3288) என்ற வழக்கில்,

" Therefore if the accused is able to establish a probable defence which creates doubt about the existence of a legally enforceable debt or liability, the prosecution can Fail. The accused can rely on the materials submitted by the complainant in order to raise such defence and it is inconceivable that in some cases the accused may not need to adduce the evidence of his/her own. If however, the accused/drawer of a cheque in question neither raises a probable defence nor able to contest existence of a legally enforceable debt or liability, obviously statutory presumption under Section 139 of the NI Act regarding commission of the offence comes into play if the same is not rebutted with regard to the materials submitted by the complainant" என்று தீர்ப்பளித்துள்ளது,

18. புகார்தாரர் சார்பாக முதல் நோக்கில் அனுமானிக்கப்படும்போது, பு.சா.ஆ.1 காசோலை சட்டப்பூர்வமான கடனுக்காக வழங்கப்படவில்லை என்று நிரூபிக்கும் சுமை எதிரிமேல் உள்ளது. குவிமுச பிரிவு 313 (1) (b)ன் கீழ் இந்நீதிமன்றம் எதிரியிடம் கேள்வி கேட்டபோது எதிரி தரப்பில் பொய் சாட்சி என்று மறுப்பு தெரிவிக்கப்பட்டதை மட்டும் வைத்து சட்டப்பூர்வமான அனுமானத்தை எதிரி மறுதளித்ததாக கருதமுடியாது. ஏனென்றால் எதிரி உறுதியான எதிர்வாதத்தை நிரூபிப்பதன் மூலமே சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுதளிக்கமுடியும்.

19. குவிமுச பிரிவு 313 (1) (b) ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்டபோது எதிரி தரப்பில் பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரியினுடையது இல்லை என்றும், பு.சா.ஆ.1 காசோலை எதிரியினுடைய வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டு மறுக்கவில்லை. மேலும் எதிரி தரப்பில் எழுத்து மூலம் தாக்கல் செய்யப்பட்ட பதிலில், தான் ரூ.2,00,000/- வாங்கியதாகவும், அந்த பணத்திற்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்ததாகவும், தான் இந்த காசோலையை செக்யூரிட்டிக்காக கொடுத்ததாகவும், இந்த காசோலை போக 2 காசோலைகள் புகார்தாரரிடம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். புகார்தாரர் தன்னை பு.சா.1 ஆக விசாரித்து பு.சா.ஆ.3 குறிப்பாணை மூலம் பு.சா.ஆ.1 காசோலை எதிரி வங்கி கணக்கில் "Funds Insufficient" என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது என்பதை புகார்தாரர் நிரூபித்துள்ளார். புகார்தாரர் சட்டப்பூர்வமான அறிவிப்பு (பு.சா.ஆ.4)ஐ எதிரிக்கு குறித்த காலக்கெடுவுக்குள் அனுப்பியுள்ளார் என்பதை திருப்பப்பட்ட அஞ்சலக உறை (பு.சா.ஆ.5) மூலம் நிரூபித்துள்ளார்.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:26 +0530

20. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Indian Bank Association Case reported in 2014 (5) SCC 590 – என்ற வழக்கில் "We make it clear that if Provisos (a), (b) and (c) to section 138 of the Act are shown to have been complied with, technically the commission of the offence stands completed and it is for the accused to show that no offence could have been committed by him for specific reasons and defences" என்று தீர்ப்பளித்துள்ளது.

21. புகார்தாரர் தரப்பில் மாற்றுமுறையாவணச்சட்டம் பிரிவு 138ன் கீழான தேவைகளை நிறைவேற்றியுள்ள நிலையில் முதல் நோக்கில் புகார்தாரருக்கு சார்பாக அனுமானிக்கப்பட்டு எதிரி தான் குற்றம் நடக்கவில்லை என்று அனுமானத்தை மறுதளிக்கவேண்டும். புகார்தாரர் தனது புகார் மனுவை ஒத்திசைந்து முதல் விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். பு.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பத்தை எதிரி தரப்பில் மறுக்கவில்லை என்பதால் எதிரி மீது பொறுப்புநிலை ஏற்படுகிறது. பு.சா.ஆ.1 காசோலையிலுள்ள கையொப்பத்தை எதிரி தரப்பில் ஒத்துக்கொள்ளும்போது அதனால் எற்படும் அனுமானத்தை மறுதளிக்க வேண்டிய பொறுப்பு எதிரி மேல் உள்ளது.

22. புகார்தாரர் மேற்படி கடன் தொகையை வங்கி மூலமாக இல்லாமல் நேரடியாக எதிரிக்கு கடன் கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. மேற்படி கடன் தொகைக்கான வருமான மூல ஆதாரத்திற்கான வங்கி கணக்கு அறிக்கை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. புகார்தாரர், எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு "Left" என்ற குறிப்பாணையுடன் திருப்பப்பட்டுள்ள நிலையில், எதிரி மேற்படி சட்ட அறிவிப்புக்கு எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை. எதிரி கடன் தொகையை கேட்ட அன்றே புகார்தாரர் மேற்படி கடன் தொகையை எதிரிக்கு கொடுத்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. புகார்தாரர் மேற்படி கடன் தொகைக்கான மூல வருமான ஆதாரத்தை விளக்கவில்லை. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில், தான் தற்போது சும்மா இருப்பதாகவும், எதிரிக்கு பணம் கொடுத்த காலத்தில் தான் சொந்தமாக லாரி வைத்து தொழில் செய்து வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளதன் மூலம் புகார்தாரர், எதிரிக்கு கடன் கொடுத்த காலத்தில் லாரி வைத்து தொழில் செய்ததாக புகார்தாரர் தரப்பு வழக்கு உள்ளது. புகார்தாரர் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் புகார்தாரர் கோமதி ஆட்டோ கன்சல்டிங் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வந்ததாக எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில் அதன் தொடர்பாக எந்த ஆவணமும் எதிரி தரப்பில் குறியிடப்படவில்லை.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:32 +0530

23. எதிரிக்கு புகார்தாரரை நேரடியாக தெரியாது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், இடைத்தரகர் மூலமாக புகார்தாரரை எதிரிக்கு தெரியும் என்று எதிரி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோது, எதிரி கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் பொது அதிகார ஆவணத்தின் படி புகார்தாரருக்கு நிலத்தை விற்க பவர் கொடுத்து அதற்கு செக்யூரிட்டியாக காசோலை கொடுத்ததாக எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுத்துள்ள நிலையில், எதிரி கு.வி.மு.ச பிரிவு 313 கீழ் எழுத்து மூலமாக தாக்கல் செய்த பதிலில் தான் ரூ.2,00,000/- வாங்கியதாகவும், தான் வாங்கிய பணத்திற்கு கோவில்பட்டி சார்பதிவாளார் அலுவலகத்தில் பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்ததாகவும், இந்த ஒப்பந்தத்தில் கமிஷன் தொகை ரூ.2,00,000/- போக மீதமுள்ள பணத்தை எதிரிக்கு சரிசெய்ய வேண்டி போடப்பட்டது என்றும், தான் இந்த காசோலையை செக்யூரிட்டிக்காக கொடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இந்நீதிமன்றத்தில் எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்டபோது தான் செக்யூரிட்டிக்காக நிரப்பப்படாத காசோலையை கொடுத்ததாக எதிரி பதிலளித்துள்ளார்.

24. ஆனால் எதிரி தனது முதல் விசாரணையில் தனது தாயாரின் நிலத்தை விற்பதற்கு புகார்தாரருக்கும், கனகராஜ் என்பவருக்கும் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும், ஆனால் புகார்தாரர் தான் சொன்னபடி சொத்தை விற்றுத்தரவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் எதிரி தனது முதல் விசாரணையில், தனக்கு பணம் தேவைப்பட்டதால் புகார்தாரர் மூலம் சென்னையை சேர்ந்த பைனான்சியர் திலீப் குமார் சேட் என்பவரிடம் ரூ.2,00,000/- கடனாக பெறுவதற்கு வேண்டி இந்த வழக்கிடை காசோலை உட்பட மூன்று காசோலைகளையும், புரோநோட்டையும் புகார்தாரர் மூலம் மேற்படி பைனான்சியர் திலீப் குமார் சேட்டுக்கு கொடுக்கப்பட்டதாகவும், மேற்படி பைனான்சியர் திலீப் குமார் சேட்டிடம் ரூ.2,00,000/- கடன் பெற்றதாகவும், அந்த தொகையை திருப்பி கொடுத்து விட்டதாகவும், அந்த காசோலைகள் மற்றும் புரோநோட்டை திருப்பி கேட்டதற்கு தனக்கு திருப்பி தரப்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். எதிரியின் எதிர்வாதங்களை கவனமாக ஆராயும் போது, எதிரி மேற்படி திலீப் குமார் சேட்டிடம் கடன் பெறுவதற்கு செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்ததாகவும், எதிரியின் நில விற்பனை சம்பந்தமாக எதிரி, புகார்தாரருக்கு பவர் எழுதி கொடுத்ததற்கு செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்ததாகவும் முரண்பட்டு எதிர்வாதங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:39 +0530

25. மேற்படி பவர் பத்திரம் சம்பந்தமாக செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்ததாகவும், மேற்படி திலீப் குமார் சேட் என்பவரிடம் கடன் பெற்றதற்காக செக்யூரிட்டிக்காக காசோலை கொடுத்ததாகவும் முரண்பாடுகளுடன் எதிரியின் எதிர்வாதங்கள் உள்ளது. புகார்தாரரை நேரடியாக எதிரிக்கு தெரியாது என்று எதிரி தரப்பில் எதிர்வாதம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி பவர் ஆவணத்தை எதிரி, புகார்தாரர் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ள நிலையில் மேற்படி எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை. ஏனென்றால் எந்த ஒரு சாதாரண நபரும் நேரடியாக தெரியாத நபருக்கு பவர் பத்திரம் எழுதிக் கொடுக்க மாட்டார். எதிரி, புகார்தாரருக்கு எந்த பவர் பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை என்று புகார்தாரர் தரப்பில் வாதம் எடுத்துள்ள நிலையில், எ.சா.ஆ.1 ஐ கவனமாக ஆராயும் போது எதிரி, புகார்தாரர் பெயருக்கு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது வெளிப்படுகிறது. மேலும் மேற்படி திலீப் குமார் சேட்டிடம் பெற்ற கடன் தொகையை எதிரி திருப்பி செலுத்தி விட்டு காசோலையை பெறவில்லை என்ற எதிரியின் எதிர்வாதம் நம்பும்படியாக இல்லை. ஏனென்றால் எந்த ஒரு சாதாரண நபரும் பொதுவாக கடன் தொகையை திருப்பி செலுத்தும் போது காசோலையை திரும்பப் பெறாமல் இருக்க மாட்டார்.

26. மேலும் எதிரி தனது குறுக்கு விசாரணையில், தான் பவரை ரத்து செய்ய சென்றபோது தனது நிலம் விற்கப்பட்டு இருப்பதாக தெரியவந்ததாகவும், தான் இந்த வழக்கிற்கு பிறகு புகார் கொடுப்பதாகவும் சாட்சியமளித்துள்ளார். எதிரியின் எதிர்வாதம் போல் எதிரியின் நிலம் விற்கப்பட்டிருந்தால், எதிரி எவ்வித காலதாமதமுமின்றி நிலம் விற்கப்பட்ட உடனே காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார். மேலும் எதிரி மேற்படி பவர் பத்திரத்தை ரத்து செய்ய ஏதாவது நடவடிக்கை எடுத்திருப்பார். மேலும் எதிரி 2014 ஆம் ஆண்டு கடன் வாங்கியுள்ள நிலையில் எ.சா.ஆ.1 2010 ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளதால், இவ்வழக்கிடை காசோலைக்கும் எ.சா.ஆ.1 பவர் பத்திரத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று புகார்தாரர் தரப்பில் வாதம் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பவர் பத்திரம் 2010 ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கிடை காசோலை கடன் தொகை 2014 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டு இந்த வழக்கிடை காசோலை 2014 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டுள்ளது.

27. எ.சா.2 வங்கி கிளை மேலாளர் புகார்தாரரின் வங்கி கணக்கு குறித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எ.சா.2 தனது முதல் விசாரணையில் 16.08.2014 அன்று வழக்கிடை காசோலை புகார்தாரர்

K ANAND Digitally signed by K ANAND Date: 2026.06.11 18:11:46 +0530

வங்கி கணக்கில் வசூலுக்கு தாக்கல் செய்ததாக துலங்காது என்றும், 26.08.2014 அன்று தங்களது வங்கியால் மேற்படி காசோலைக்கு குறிப்பாணை வழங்கியதாக துலங்காது என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையில், எ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் மேற்படி காசோலை 26.08.2014 அன்று தங்கள் வங்கியில் இருந்து திருப்பப்பட்டுள்ளது என்றும், காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை பு.சா.ஆ.3 என்றும், தேதி தான் வேறுபாடாக உள்ளது என்றும், காசோலையின் பின்பக்கம் காசோலை ரத்து செய்யப்பட்ட தேதி 26.08.2014 அன்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார். புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கை எ.சா.ஆ.2 ஐ கவனமாக ஆராயும் போது 27.08.2024 அன்று காசோலை திருப்பப்பட்டுள்ளதும், பல்வேறு தேதிகளில் பெரிய தொகை பண பரிமாற்றம் நடந்துள்ளது மூலம் புகார்தாரருக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு போதிய பண வசதி உள்ளதும் வெளிப்படுகிறது.

28. எதிரியின் எதிர்வாதங்கள் உண்மையாக இருந்திருந்தால் எதிரி முரண்பட்டு இரண்டு வெவ்வேறான எதிர்வாதங்களை எடுத்திருக்க மாட்டார். எதிரியின் எதிர்வாதங்கள் முற்றிலுமாக முரண்பாடாக உள்ளதால் எதிரியின் எதிர்வாதங்கள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. எ.சா.1, பவர் பத்திரத்தை பார்வையிடும் போது புகார்தாரரும், எதிரியும் ஏற்கனவே பழக்கமுடையவர்கள் என்பது வெளிப்படுகிறது. புகார்தாரர் மேற்படி கடன் தொகைக்கான மூல ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்பதை வைத்து மட்டும் புகார்தாரரது வழக்கை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி திலீப் குமார் சேட் என்பவரிடம் கடன் பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்ததாகவும், மேலும் பவர் பத்திரத்தின் சொத்து விற்பனைக்காக செக்யூரிட்டிக்காக புகார்தாரரிடம் காசோலை கொடுத்ததாகவும் உள்ள எதிரியின் எதிர்வாதங்கள் ஏற்புடையதாக இல்லை.

29. புகார்தாரர் தனது குறுக்கு விசாரணையில் பெரிய அளவில் முரண்பாடுகளின்றி சாட்சியம் அளித்துள்ளதாலும், எதிரியின் எதிர்வாதங்கள் நம்பும்படியாக இல்லை என்பதாலும், புகார்தாரரும், எதிரியும் ஏற்கனவே தெரிந்தவர்கள் என்பது எதிரியின் சாட்சியத்தில் வெளிப்படுவதாலும், எதிரியின் எதிர்வாதங்களை நிரூபிக்க எதிரி தரப்பில் போதுமான சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், எதிரியின் எதிர் வாதங்கள் முரண்பாடாக உள்ளதாலும், புகார்தாரர் தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:53 +0530

30. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு எதிரான மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138ன் கீழான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டு, எதிரி மாற்றுமுறையாவணச்சட்டப் பிரிவு 138ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

31. இவ்வழக்கானது காசோலை மோசடி வழக்கு என்பதாலும், எதிரி குற்ற செய்கைகளினால் புகார்தாரர் பாதிக்கப்பட்டு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாலும், இவ்வழக்கில் எதிரிக்கு குற்றவாளிக்கான நன்னடத்தைச் சட்டத்தின் பயனை வழங்குவது ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>இறுதியாக</u>

32. இறுதியாக எதிரி மீது மாற்றுமுறையாவணச் சட்டப் பிரிவு 138ன் கீழான குற்றத்திற்கு ஆறு மாத காலம்(6) கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும், மேலும், இவ்வழக்கில் வழக்கு காசோலைக்கான தொகை ரூ.4,00,000/- என்பதை கருத்திற்கொண்டும், இவ்வழக்கு 2014ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு 11 வருடத்திற்கு மேலாக நிலுவையில் இருந்து வருவதை கருத்திற்கொண்டும், 11 வருடங்களாக புகார்தாரருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலை கருத்திற்கொண்டும், எதிரி கு.வி.மு.ச. பிரிவு 357(3)ன் படி காசோலைக்கான தொகை ரூ.4,00,000/-ஐ 9% வட்டியுடன் சேர்த்து காசோலை திருப்பப்பட்ட நாளான 26.08.2014 முதல் காசோலைக்கான தொகையை திருப்பி கொடுக்கும் வரையிலான தேதி வரை கணக்கிட்டு மொத்த இழப்பீடாக புகார்தாரருக்கு கொடுக்கவேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தத்தவறும் பட்சத்தில் எதிரிக்கு கூடுதலாக மூன்று மாதங்கள் கடுங்காவல் சிறை தண்டனை விதித்தும் குவிமுச பிரிவு 255 (2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறும்பட்சத்தில் மாற்றுமுறையாவண சட்டப்பிரிவு 138-ன் கீழான தண்டனையை அனுபவித்த பிறகு மேற்படி இழப்பீட்டு தொகையை செலுத்த தவறினால் விதிக்கப்படும் மேற்படி தண்டனையை எதிரி ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்கவேண்டும். இந்த வழக்கில் இழப்பீட்டு தொகை உத்தரவிடப்பட்டுள்ளதால் எதிரிக்கு அபராதம் விதிக்கப்படவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:11:59 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பிறகு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 வருடம் ஜீன் மாதம், 11–ம் தேதி வியாழக்கிழமை இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:12:07 +0530

நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை)
கோவில்பட்டி(மு.கூ.பொ).

இணைப்பு:

புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:

புகார்தாரர் தரப்பு சாட்சிகள் எண்	சாட்சிகளின் பெயர்	விளக்கம்
1.	செல்வராஜ்	புகார்தாரர் – பு.சா.1

புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
1	16.08.2014 தேதியிட்ட HDFC வங்கி, கோவில்பட்டி கிளையின் ரூ.4,00,000/–ற்கான காசோலை எண்.000001 கொண்ட காசோலை அசல்	பு.சா.1 –26.11.2025
2	16.08.2014 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி கிளையின் செக் டெப்பாசிட் செல்லான் அசல்	பு.சா.1 –26.11.2025
3	26.08.2014 தேதியிட்ட சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி கிளையின் காசோலை திருப்பட்டதற்கான குறிப்பாணை அசல்	பு.சா.1 –26.11.2025
4	10.09.2014 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்	பு.சா.1 –26.11.2025
5	11.09.2014 தேதியிட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல்	பு.சா.1 –26.11.2025

சாட்சிகள் தரப்பு சான்றாவணம்: இல்லை

K ANAND
Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:12:13 +0530

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>:

புகார்தாரர் தரப்பு சாட்சிகள் எண்	சாட்சிகளின் பெயர்	விளக்கம்
1.	ஆனந்தன்	எதிரி – எ.சா.1
2.	கோகுல்நாத்	கிளை மேலாளர், சிட்டி யூனியன் வங்கி, கோவில்பட்டி– எ.சா.2

<u>எதிரிகள் தரப்பு சான்றாவணம்:</u>

சான்றாவணம் எண்	சான்றாவணத்தின் விளக்கம்	நிரூபித்தவர்/சான்றளித்தவர்
1	13.04.2010 தேதியிட்ட எதிரி, புகார்தாரருக்கு கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.489/2010–ன் படி எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சான்றிட்ட நகல்	எ.சா.1 – 15.05.2026
2	01.01.2013 முதல் 31.12.2015 வரையுள்ள புகார்தாரரின் வங்கி கணக்கு அறிக்கையின் கணினிவழி சான்றிட்ட நகல் மற்றும் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 65(B)–கீழான சான்று	எ.சா.2 – 08.06.2026

குறிப்பு:

1. தீர்ப்பு பகரப்பட்ட அன்று எதிரி ஆஜர்.
2. தீர்ப்புரையின் நகல் எதிரிக்கு கட்டணமின்றி வழங்கப்பட்டது.
3. புகார்தார்ருக்கு செலுத்தவேண்டிய இழப்பீட்டுத் தொகையை எதிரி செலுத்தவில்லை.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2026.06.11 18:12:20 +0530

நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்(நடுவர் நிலை)
கோவில்பட்டி(மு.கூ.பொ).